செ.வெ.எண்.05 நாள்: 02.07.2019

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட குறு,சிறு மற்றும் நடுத்தர தொழிற்சங்கம் (துடிசியா) இணைந்து பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான் ஒரு நாள் தொழில் முனைவு பயிற்சியை வரும் ஆகஸ்ட் மாதம் 6 ம் தேதி துடிசியா நடத்துகிறது.- தூத்துக்குடி மாவட்ட குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் சங்கத்தின் பொதுசெயலாளர் ராஜ்செல்வின் அவர்கள் தகவல்

---

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட குறு,சிறு மற்றும் நடுத்தர தொழிற்சங்கம் (துடிசியா) இணைந்து பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான் ஒரு நாள் தொழில் முனைவு பயிற்சியை வரும் ஆகஸ்ட் மாதம் 6 ம் தேதி துடிசியா நடத்துகிறது.

இது குறித்து தூத்துக்குடி மாவட்ட குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் சங்கத்தின் பொதுசெயலாளர் ராஜ்செல்வின் அவர்கள் செய்திகுறிப்பில் கூறியதாவது

மாண்புமிகு தழிழக முதல்வர் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களை மேம்படுத்த பல திட்டங்களை அறிவித்துள்ளார்கள். மானியங்களுடன் கூடிய கடன் உதவி, ஈடு உத்திரவாத நிதியம் மற்றும் முயற்சி மூலதன நிதியம் போன்ற திட்டங்கள் அரசின் கொள்கையளவில் வடிவுபெற்றுள்ளன. இதன் ஒரு பகுதியாக சிறந்த தொழில்முனைவோர்களை கண்டறிய சென்னையிலுள்ள தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மாவட்ட குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் சங்கத்துடன் **(துடிசியா)** இணைந்து **பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான் ஒரு நாள் தொழில் முனைவு பயிற்சியை** 06-08-2019 செவ்வாயகிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை தூத்துக்குடி மாவட்ட குறு,சிறு மற்றும் நடுத்தர தொழிற்சங்கம் துடிசியா நடத்துகிறது. அடுத்த கட்டமாக திட்ட அறிக்கை தயாரித்தல் பயிற்சி, தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு அவர்களுக்கு நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழங்கப்படும். தகுதி உள்ளவர்கள் அரசு வழங்கும் மான்ய திட்டங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அதன்மூலம் நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழங்கப்படும். திட்டங்கள் மூலம் நிதி உதவி பெறும் ‘தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியாளர்’ திட்டங்களில் குறிப்பிட்டுள்ள கட்டாய பயிற்சியிலிருந்து விலக்கு பெறலாம். இப்பயிற்சிகளில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்துடன் மாவட்ட தொழில் மையங்களும் இணைந்து செயல்படும். எனவே, அரசு திட்டங்கள் பற்றிய விளக்கங்களும் அதன் மூலம் பயன்பெறும் வழிவகைகளும் ஏற்படுத்தி தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு தூத்துக்குடி மாவட்ட குறு,சிறு மற்றும் நடுத்தர தொழிற்சங்கம் துடிசியா எண்கள் 0461-2347005, 98401-58943 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.. இந்த தகவலை தூத்துக்குடி மாவட்ட குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் சங்கத்தின் பொதுசெயலாளர் ராஜ்செல்வின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.